10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 204 வியாழக்கிழமை டிசெம்பர் 14 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## ரயில் சேவை வழமைக்கு

கொழும்பு, டிசெ. 14

ரயில் சேவைகள் இன்று முதல் வழமைக்குத் திரும்பும் என ரயில்வே திணைக்களப் பொது முகாமையாளர் எஸ்.எம். அபேவிக்ரம தெரிவித்தார்.

ரயில் சாரதிகளின் பிரதிநிதிகளுக்கும் அமைச்சரவைக் குழுவுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சை 06▶

## நீடிக்கிறது பங்குச் சண்டை

யாழ்ப்பாணம், டிசெ. 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் இடையே பங்கீட்டுப் பிரச்சினை இன்னமும் முடிவுக்கு வரவில்லை.

புளொட் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் 3 பிரதேச சபைகள் வழங்கப்படுதாக உறுதி வழங்கப்பட்டது. ஆனாலும் வலி. தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அக்கட்சி கோரிய வலி. மேற்கு, வலி. தெற்கு பிரதேச சபைகளை இலங்கைத் தமிழரசுக் 06▶

## "விலகுங்கள்"

யாழ்ப்பாண், டிசெ. 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுமந்திரன் ஆகியோர் அரசியலில் இருந்து விலக வேண்டும். இவர்கள் விலகினால் தான் தமிழ் மக்களுக்கு விடிவு ஏற்படும் எனத் தெரிவித்திருக்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் உள்ளூரட்சி சபைத் தேர்தலில் சாவகச்சேரி நகர சபையில் போட்டியிடும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த பின்னரே அவர் இதனைத் தெரிவித்தார். (ச)

# 56 ஆண்டு கடூழிய சிறை

## வில்பத்து தாக்குதலாளிகளான விடுதலைப் புலி வீரர்களுக்கு



கொழும்பு, டிசெம்பர் 14

விடுதலைப் புலிகளின் வீரர்கள் எழுவருக்கு 56 வருட கடூழிய சிறைத் தண்டனை நேற்று விதித்தது அனுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்றம்.

வில்பத்து தேசிய சரணாலயத்தில் கிளைமோர் வெடிக்க வைத்து 7 பேரின் உயிரிழப்புக்குக் காரணமாக இருந்த குற்றத்துக்காகவே இத்தண்டனை வழங்கப்பட்டது.

2006 மே 27 ஆம் திகதி வில்பத்து தேசிய சரணாயலத்துக்குள் நுழைந்த விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்தினர். இதில் மருத்துவர் ஒருவர் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். 06▶

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம்

## ஆணையாளர்களில் மூவரே தமிழ் பேசுவோர்

கொழும்பு, டிசெ. 14

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஆணையாளர்களாக நியமிக்கப் பரிந்துரைக்கப்பட்டவர்களில் மூவரே தமிழ்மொழி பேசுபவர்கள் - அதிலும் இருவரே தமிழர்கள் என்றும் ஏனைய நால்வரும் சிங்கள மொழி பேசுவோர் என்றும் தெரியவந்துள்ளது.

புதிதாக உருவாக்கப்படவுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஆணையாளர் பதவிகளுக்கு நியமிப்பதற்காக ஏழு பேரின் பெயர்களை அரசியலமைப்பு 06▶

## போதைப் பொருள் கடத்தலில் இராணுவம் ஈடுபடுகின்றது

பகிரங்கப்படுத்துகிறார் ஐ.தே.க. அமைப்பாளர்



யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்ப்பாணம்-கொழும்பு இடையே இராணுவம் பேருந்து சேவையை அனுமதி இல்லாமல் நடத்துகிறது. இந்தப் பேருந்துகளி 06▶

## மருத்துவத்துறை தகுதிக்கு இனி ஆகக்குறைந்த சித்தி

கொழும்பு, டிசெ. 14

மருத்துவக்கல்விக்கான ஆகக்குறைந்த தரத்தை, வைத்திய கட்டளைகள் சட்டத்தின் கீழ் அமைகின்ற ஒழுங்கு விதிகளாக கொண்டு வருவதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மருத்துவக் கற்கைகளுக்கு ஆகக்குறைந்த தகைமைகளை உள்ளடக்கி மருத்துவ சபை, சட்டமூலம் ஒன்றை தயாரித்துள்ளது. இத்தரத்தை வெளியிடுவது தொடர்பில் இலங்கை மருத்துவ சபை, பல்கலைக் கழக மானியங் 06▶

## பழிவாங்கல் இடமாற்றத்துக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை

யாழ்ப்பாணம், டிசெ.14

மாணவிகளை ஆசிரியரொருவர் கொடுமைப்படுத்தியதை அம்பலப்படுத்தியதால், பழிவாங்கல் நடவடிக்கையாக ஆசிரியை ஒருவருக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்துக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளார் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 2016ஆம் ஆண்டு 6ஆம் மாதம் மாணவிகள் இருவரைக் கொடுமைப்படுத்தினார் என்று ஆசிரியர் ஒரு மீது, அதே பாடசாலையில் கடமையாற்றும் சங்கீத ஆசிரியை ஒருவரால் முன்வைக்கப்பட்டது.

ஆயினும் இந்த விடயம் குறித்த பாடசாலையின் அதிபர் மற்றும் சில ஆசிரியர்களால் மூடிமறைக்கப்பட்டது. எனினும் பாடசாலை மாணவர்கள் தொடர் போராட்டத் 06▶



வித்தியா படுகொலை

## வழக்கு விசாரணை ஏடுகள் உயர்நீதிமன்றிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் மூன்று நீதிபதிகள் கொண்ட ட்ரயல் அட்பார் நடத்திய மூல வழக்கேடுகள் மற்றும் பிரதிகள் நேற்று உயர் நீதிமன்றில் கையளிக்கப்பட்டன.

இந்த வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 7 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இதனை எதிர்த்து அவர்கள் உயர்நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

இதற்கமைவாகவே வழக்கின் மூல வழக்கேடுகளை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் 06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைத்தியசாலையில் பரீட்சை எழுதிய மாணவன்

கொழும்பு,டிசெ.14

2017 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவரொருவர் வைத்தியசாலையில் வைத்துப் பரீட்சையை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை எழுதினார்.

மீகொடை மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்துக்கு மோட்டார் சைக்கிள் மூலம் அநுஷ மதுரங்க என்ற மாணவர் தனது சகோதரனுடன் புறப்பட்டு,பரீட்சை நிலையத்தினை அண்மித்த வேளை,அவர்களுக்குப் பின்னால் வந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேரூந்தொன்று மோதி விபத்தேற்பட்டது. இந்த நிலையில், இருவரும் ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

எனினும் சாதாரண தர பரீட்சை எழுதவிருந்த அநுஷவிற்கு ஹோமாகம வலய கல்வி அலுவலகத்தின் பரீட்சைக் கண்காணிப்பாளர் ஒருவரின் விசேட மேற்பார்வையின் கீழ் வைத்தியசாலையிலேயே பரீட்சை எழுதுவதற்கான அனுமதி கிடைத்தமையால் வைத்தியசாலையிலேயே பரீட்சை எழுதினார். (எ)

# ஜனாதிபதியின் இரகசியக் கடிதம்

## கிழித்து வீசிய கம்மன்பில





கொழும்பு,டிசெ.14

இலங்கையில் போர்க் குற்றங்கள் இடம்பெறவில்லை எனத் தெரிவித்த நெஸ்பி பிரபுவுக்கு நன்றி தெரிவித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரகசியக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்று புதன்கிழமை தெரிவித்தார்.

நெஸ்பி பிரபுவுக்கு நன்றி தெரிவித்து ஜனாதிபதி கடிதம் எழுதியுள்ளமை பாராட்டப்பட வேண்டிய விடயம். ஆனால் இந்தக் கடிதம் பற்றி பிரிட்டனிலோ இலங்கையிலோ யாருக்கும் தெரியாது. தமிழ் பிரிவினைவாதிகளின் அழுத்தங்களால் குறித்த கடிதம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது என்றும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

"ஐ.நா அறிக்கையில் கூறப்பட்டது போல இறுதிப் போரில் 40,000 பொதுமக்கள் கொல்லப்படவில்லை. 7000 - 8000 வரையான மக்களே கொல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் சாதாரண உடையில் இருந்த புலிகள்" என்று பிரித்தானிய பிரபுக்கள் சபையில் இலங்கைக்காதரவாக நெஸ்பி பிரபு கூறியிருந்த நிலையிலேயே நெஸ்பி பிரபுவுக்கு நன்றி தெரிவித்து ஜனாதிபதி கடிதம் எழுதினார்.

வெளிவிவகாரச் செயலரின் கடிதம் ஒன்றுடன் இணைத்தே குறித்த கடிதமும் வழங்கப்பட்டது. இதில் ஜனாதிபதியின் கடிதம் குறித்து இலங்கைக்கோ அல்லது பிரிட்டன் ஊடகங்களுக்கோ பகிரப்படக் கூடாது என வெளிவிவகாரச் செயலரின் இணைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதென்றும் ஏன் இந்த இரகசியம்? ஜனாதிபதி தனது கருத்தை வெளிப்படுத்துவதற்கு அச்சம் கொண்டிருந்தால் அது தமிழ் பிரிவினைவாதிகள் குறித்த அச்சமாகவே இருக்கும். இந்த இரகசியம் குறித்து ஜனாதிபதி அறிந்திருந்தாரா? என்றும் உதய கம்மன்பில கேள்வி எழுப்பியுள்ளார். (எ)

## புலிகளைப் பார்த்தவர்கள் இராணுவத்தைப் பார்க்காதது ஏன்?

# ஐ.நா.வை சாடிய வீரசேகர



கொழும்பு,டிசெ.14

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கைதிகளைச் சென்று பார்வையிட்ட ஐ.நா குழுவினர், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கடற்படை அதிகாரிகளைப் பார்வையிடவில்லை என ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர நேற்று புதன்கிழமை தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் பலவந்தமாகத் தடுத்து வைத்தல்களுக்கெதிரான ஐக்கிய நாடுகளின் குழுவினர் மீதே ரியர் அட்மிரல் சரத் வீரசேகர குறித்த குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.

கொமாண்டர் தஸநாயக்க மற்றும் லப்டினன் கொமாண்டர் சுமித் ரணசிங்க ஆகியோர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனினும், அவர்களை ஐக்கிய நாடுகள் குழுவினர் பார்வையிடவில்லை எனக் குற்றம் சுமத்தியுள்ளார். அவர்கள், விடுதலைப் புலிகளின் சந்தேக நபர் குறித்தே ஆர்வமாகவுள்ளனர் என்பது இதிலிருந்து புலப்படுவதாகவும் அவர் கூறினார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த கடற்படையினர் கப்பம் கோரியதற்கு ஆதரம் இல்லை எனக் குற்றப் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த விசாரணைகள் கடந்த எட்டு ஆண்டுகளாக இடம்பெற்று வருகின்றன. எனினும், விசாரணைகள் நிறைவடையும் வரை அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் காலவரையறையின்றி சிறையில் இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும் என ரியர் அட்மிரல் சரத் வீரசேகர குற்றம் சுமத்தியுள்ளார். (எ)

# 50,000 ரூபா அபராதம்

முல்லைத்தீவு,டிசெ.14

முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற நபருக்கு ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம்,முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னிலைப்படுத்திய போது விதிக்கப்பட்டது.

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற நபரைப் பொலிஸார் கைது செய்து, அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# 'அந்த' விடயம்... முதலிடம் பறிபோனது

கொழும்பு,டிசெ.14

இணையத்தில் செக்ஸ் என்ற வசனத்தை தேடும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்திலிருந்த இலங்கை, தற்போது மூன்றாமிடத்துக்கு வந்துள்ளதாக நேற்று புதன்கிழமை தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில வருடங்களாகவே இந்தப் பட்டியலில் இலங்கை முதலிடத்திலிருந்தது. தற்போது பங்களாதேஷ் முதலிடத்திலும் எத்தியோப்பியா இரண்டாம் இடத்திலும் உள்ளன. மேலும் நேபாளம் நான்காம் இடத்திலும், இந்தியா ஐந்தாம் இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மகேஸ்வரன் கொலை வழக்கு மனு தள்ளுபடி

கொழும்பு,டிசெ.14

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியால் தாக்கல் செய்யப்பட்ட மேன் முறையீட்டு மனு, 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதி பரிசீலனைக்கெடுத்துக் கொள்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளான தேவிகா தென்னகோன் மற்றும் எஸ்.துறைராஜா ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி கொழும்பில் வைத்து முன்னாள் அமைச்சர் தி. மகேஸ்வரனும் அவரது பாதுகாவலரும் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து வழக்கின் முக்கிய சந்தேக நபரான ஜோன்ஸ்டன் கொலின் வலன்ஸ்டினோ கைது செய்யப்பட்டதுடன், அவருக்கு 2012ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி மரண தண்டனை விதித்துக் கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## பலவந்தமாகத் தடுத்து வைத்தல்:

# ஐ.நாவின் விளக்கம் நாளை

கொழும்பு,டிசெ.14

பலவந்தமாகத் தடுத்து வைத்தல்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் குழு, தமது இலங்கைப் பயணம் குறித்து நாளை வியாழக்கிழமை கொழும்பில் விளக்கமளிக்கவுள்ளது.

ஜோஸ் அன்டோனியோ குவேரா பெர்மூட்ஸ்,லெய்த் டோமே மற்றும் எலினா ஸ்டெய்னேட ஆகியோர் அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டனர். கடந்த 4ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட அந்தக் குழுவினர், நாளை 15ஆம் திகதிவரை இலங்கையில் தங்கவுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் இந்த நிபுணர்கள் கொழும்பு, வடக்கு, கிழக்கு, வடமத்திய, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

பலவந்தமாகத் தடுத்து வைத்தல்களுக்கெதிரான ஐ.நாவின் இந்தச் செயற்பாட்டுக் குழுவினர் 2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தில் இலங்கை தொடர்பான இறுதி அறிக்கையைக் கையளிக்கவுள்ளனர். (எ)

# உலகின் சிறந்த கட்டடம் இலங்கையிலும்

மட்டக்களப்பு,டிசெ.14

உலகின் சிறந்த கட்டடங்களில் ஒன்றாக இலங்கையிலுள்ள கட்டடமும் தெரிவாகியுள்ளது.

பிரிட்டன் நிறுவனம் ஒன்றினால் 2018ஆம் ஆண்டுக்கான உலகின் மிகச் சிறந்த கட்டடங்களின் பட்டியலொன்று ராயல் இன்ஸ்டிடியூட் ஆப் பிரிட்டிஷ் ஆர்கி[illegible] என்ற நிறுவனத்தினால் குறித்த பட்டியல் வெளியிடப்பட்டது. சமீபத்தில் உலகம் முழுவதும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட கட்டடங்கள் இதனுள் உள்ளடக்கப்பட்டது.

மட்டக்களப்பு, கிரான் பகுதியில் அமைந்துள்ள லங்கா லெர்னிங் சென்டர் என்ற கட்டடமே இவ்வாறு சிறந்த கட்டடங்களில் இணைந்துள்ளது "எதிர்காலத்தில் சிறந்த எதிர்காலம் [illegible] நோக்குதல்" என்ற தொனிப்பொருளின் கீழ் லங்கா லெர்னிங் சென்டர் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.இங்கு கல்வி மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகளின்றி பாதிக்கப்பட்டுள்ள மத, இன வேறுபாடுகள் இன்றி சகலரும் பயன்பெற முடியும். லங்கா லெர்னிங் சென்டர் கட்டடம் இயற்கையை முழுமையாகப் பாதுகாத்து மிகவும் குறைந்த செலவில் நிறைவு செய்யப்பட்ட கட்டடமாகும். இந்தக் கட்டடம் உலகளாவிய ரீதியில் பெயரிடப்பட்டுள்ளமை இலங்கைக்குக் கிடைத்த கௌரவமாகும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
வியாழன், 14 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

# மீண்டெழுமா கிளிநொச்சி?

இலங்கையிலேயே வறுமையில் முதலிடம் வடக்கின் கிளிநொச்சிக்குக் கிடைத்திருக்கிறது. கடந்த வருடம் இந்த முதலிடத்தை முல்லைத்தீவு பெற்றிருந்தது. அந்த இடத்தையே கிளிநொச்சி தட்டிப் பறித்திருக்கிறது.

ஒரு காலத்தில் இலங்கையின் நெற் களஞ்சியம் என்று புகழப்பட்ட பெருமை கிளிநொச்சிக்குரியது. நீர் வளமும் நில வளமும் நிறைந்த பகுதி. காட்டை வெட்டி களனியாக்கும் கடின உழைப்பாளிகளையும் கிளிநொச்சி கொண்டிருந்தது. அதனால்தான் முழு இலங்கைக்குமே நெல்லைப் படியளக்கும் வல்லமை அந்த மாவட்டத்துக்கு இருந்தது. இறுதிப்போர் வரை கிளிநொச்சியின் கெத்து குறையவில்லை. இன்னும் சொல்லப்போனால், யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் – 1995க்குப் பின்னர் – தமிழர்களின் தற்காலிக தலைநகரமாக மாறி, இலங்கையின் வரலாற்றையே திருப்பிப்போட்ட நிகழ்வுகளுக்கு அடித்தளம் இட்ட இடமாகவும் கிளிநொச்சியே விளங்கியது.

இறுதிப்போருக்குப் பின்னர் எல்லாமே தலைகீழாகப் போனது. கிளிநொச்சியின் உழைக்கும் ஆளணியில் பெரும்பான்மையினரை போர் அங்கவீனர்களாக்கியிருந்தது. ஆண்களில் அநேகர் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். பெண்களில் தலையில் குடும்பச்சுமை விழுந்தது. அதன் பின்னர் அபிவிருத்தி என்ற பெயரிலும், படைத்தளங்கள் என்ற பெயரிலும் பெருமளவான விவசாயக் காணிகள் விழுங்கப்பட்டன. நீர்ப்பாசனக் குளங்களும் வாய்க்கால்களும் பராமரிப்பின்றி போயின. இதைவிட நுண்நிதி கடன் என்ற பெயரில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் வலிந்து கடனாளிகள் ஆக்கப்பட்டனர்.

இந்த வலிந்த கடனை வாங்கி வயலில் போட்டு அறுவடையில் அதனை ஈடுசெய்யலாம் என்ற நினைப்பு விவசாயிகளுக்கு இருந்தது. ஆனால் வேளாண்மை பலமுறை பொய்த்துப் போனதால் கடனும் வட்டியும்தான் ஏறியதே தவிர வேறு எதுவும் உருப்படியாக நடக்கவில்லை. சொந்தமாக இருந்த காணிகளையும் களனிகளையும் விற்று கடனை அடைக்குமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டது. வேளாண்மையால் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தலாம் என்ற நம்பிக்கையோடு வாங்கிய கடன்கள் கடைசியில் கழுத்தறுக்கவே செய்தது. இருந்ததும் போய் விவசாயிகள் என்ற பெயரை இழந்து கடனாளிகள் என்ற புதிய நாமத்தோடு அவர்கள் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள்.

இன்னொரு புறத்தில் தென்னிலங்கையிலிருந்து கிளிநொச்சியில் கடை பரப்பிய வணிக நிறுவனங்கள் அந்த மாவட்டத்தின் வளங்களை கொள்ளை விலையில் அள்ளிக்கொண்டு போனார்கள். உற்பத்தி நிலையங்கள் எதுவும் அமைக்கப்படாத நிலையில் மூலப்பொருட்களாகவே தங்கள் வளங்கள் அத்தனையும் அடிமாட்டு விலைக்கு கொடுக்கவேண்டிய நிலை கிளிநொச்சி மக்களுக்கு ஏற்பட்டது.

இவையெல்லாம் தற்செயலாக நிகழ்ந்தவையல்ல. மிகத் திட்டமிட்டு வளம்கொழித்த ஒரு மாவட்டம், வறுமையில் முதலிடம் என்ற இழி நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இத்தனைக்கும் கிளிநொச்சி செய்த ஒரே குற்றம், தமிழர்களின் தன்மானத் தலைநகராக இருந்ததுதான். போரினால் நலிந்துபோன கிளிநொச்சி மக்களின் வாழ்வாதாரத்தை அரசோ, தொண்டு நிறுவனங்களோ சரிவர கட்டியெழுப்பாமையே இதற்கு முக்கிய காரணம். போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு என சர்வதேச நாடுகள் வழங்குகின்ற உதவிகளை வழி மறித்து அவற்றில் பெரும் பகுதியை தென்னிலங்கைக்கு உறிஞ்சிவிடுவதால் இன்னும் சரியான வாழ்வாதாரப் புள்ளியை கிளிநொச்சி உள்ளிட்ட வடக்கின் எந்தவொரு மாவட்டத்திலும் ஏற்படுத்த முடியவில்லை.

உலகிலேயே மிகப்பெரிய கிறிஸ்மஸ் மரத்தை அமைத்த சாதனையை இலங்கையின் தலைநகரம் கொண்டாடிக்கொண்டிருக்கும் அதேசமயத்தில்தான் இலங்கையிலேயே வறுமையான மாவட்டம் என்ற நிலையில் கிளிநொச்சி திண்டாடிக்கொண்டிருக்கிறது. பகட்டுக்காக அமைக்கப்பட்ட அந்த கிறிஸ்மஸ் மரத்தை அமைப்பதற்காக செலவீனத்தில் குறைந்தபட்சம் 10 குடும்பங்களின் வாழ்வாதாரத்தையாவது மேம்படுத்தியிருக்கலாம். இதுபோல தென்னிலங்கையிலும் ஏனைய பகுதிகளிலும் நடக்கும் கேளிக்கைகளுக்கான செலவீனத்தை போரால் அழிவுற்ற பகுதிகளை கட்டியெழுப்ப பயன்படுத்தலாம். அவ்வாறு செய்தால் வறுமையற்ற மாவட்டங்களில் ஒன்றாகவும் மீண்டும் இலங்கையில் நெற் களஞ்சியமாகவும் மிக விரைவாகவே கிளிநொச்சி தலைநிமிரும். ஏனெனில் பலமுறை வீழ்ந்தபோதும் அதைவிட விரைவாகவே தழைத்த வரலாறு கிளிநொச்சிக்கு உண்டு. வறுமையிலிருந்தும் அது விரைவில் மீண்டெழும்.

“உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்”




# ஒற்றையாட்சியை நிராகரிக்க சைக்கிளுக்கு வாக்களியுங்கள்

## தமிழ்க் காங்கிரஸ் அமைப்பாளர் மணிவண்ணன்

கொழும்பு, டிசெ.14

ஒற்றையாட்சியை நிராகரிப்பதாயின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சாவகச்சேரி நகர சபைக்கான வேட்பு மனுவை நேற்று தாக்கல் செய்தது.

சாவகச்சேரி நகர சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் யாழ். மாவட்டச் செயலகத்தின் தேர்தல்கள் அலுவலகத்துக்குச் சென்ற கட்சியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

வேட்புமனுத் தாக்கல் செய்தபின் ஊடகவியலாளர்களைச் சந்தித்த கட்சியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன்,

“நாங்கள் சாவகச்சேரி நகர சபைக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றோம். சாவகச்சேரி நகர சபையில் மிகக் கடுமையான போட்டியைக் கொடுக்க, எமது வேட்பாளர்கள் தயாராகவுள்ளனர். நாங்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கின்றோம். அந்த மாற்றத்தைத் தரக்கூடிய சிறந்த வேட்பாளர்களை நாங்கள் தெரிவு செய்திருக்கின்றோம்.

சாவகச்சேரியை ஊழலற்ற நகர சபையை உருவாக்கி நாங்கள் நிர்வகிக்கவேண்டும் என்ற விருப்பத்திற்கமைவாக வேட்பாளர்களை இனங்கண்டு தெரிவு செய்திருக்கின்றோம்.

இத் தேர்தலை வெறுமனே உள்ளூராட்சித் தேர்தலாகக் கடந்து விட முடியாது. ஒரு புதிய அரசியல் யாப்பு மாற்றத்துக்கான இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஒற்றையாட்சியே வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த ஒற்றையாட்சியை நிராகரிக்கக் கோருகின்ற ஒரு நாடிபிடித்துப் பார்க்கக் கூடிய ஒரு தேர்தலாகவே இந்தத் தேர்தல் அமைந்திருக்கின்றது.

ஒற்றையாட்சியை நிராகரிக்க வேண்டும் என்ற விடயத்தையும் இந்தத் தேர்தலின் ஊடாக நாங்கள் எடுத்துக்கூறவேண்டும். இந்த அரசியலமைப்பு மாற்றத்துக்கான இடைக்கால அறிக்கையை ஆதரித்து ஒரு தரப்பு களமிறங்கியுள்ளமை உங்களுக்குத் தெரிந்த விடயம். எங்களைப் பொறுத்தவரை இந்தத் தேர்தலில் எங்கள் கோஷமாக இருக்கப்போவது ஒற்றையாட்சியை நிராகரிப்பதாயின் எங்களுக்கு வாக்களியுங்கள் என்பதுதான். ஒற்றையாட்சியை மக்கள் நிராகரிக்கப்போகின்ற முதல்கட்ட ஒரு வாக்கெடுப்பாகவே இந்தத் தேர்தல் பார்க்கப்படும்” - என்றார். (ச)

# 8,548 முறைப்பாடுகள்

## சிறுவர் துஷ்பிரயோகங்கள்

கொழும்பு, டிசெ.14

இந்த வருடத்தில் 8 ஆயிரத்து 548 சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. இவற்றில் சிறுவர்களை கல்வி கற்குமாறு வற்புறுத்துவது குறித்து ஆயிரத்து 298 முறைப்பாடுகளும், பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் 481 முறைப்பாடுகளும், கடுமையான பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்திய 284 முறைப்பாடுகளும், 18 வயதுக்கு குறைவான சிறுமிகள் பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்ட 322 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, குழந்தை மற்றும் சிறுவர் கட்டளைச்சட்டத்தின் கீழ் 358 குழந்தைகள் புறக்கணிப்பு முறைப்பாடுகளும், 246 சிறுவர் தொழிலாளர்கள் குறித்த முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் அதிகப்படியாக, கொழும்பு மாவட்டத்தில் ஆயிரத்து 232 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், யாழ்ப்பாணத்தில் 177 முறைப்பாடுகளும், வவுனியா மாவட்டத்தில் 122 முறைப்பாடுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 170 முறைப்பாடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 125 முறைபாடுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 117 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

தேநேரம், கம்பஹா மாவட்டத்தில் 925 முறைப்பாடுகளும், களுத்துறை மாவட்டத்தில் 550 முறைப்பாடுகளும், காலி மாவட்டத்தில் 647 முறைப்பாடுகளும், குருநாகல் மாவட்டத்தில் 564 முறைப்பாடுகளும், இரத்தினபுரியில் 490 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# ‘வாக்களிக்கும் நிலையில் இல்லை’




முல்லைத்தீவு, டிசெ. 14

“ஒவ்வொருவரையும் நம்பி வாக்களித்து ஏமாந்துவிட்டோம். இனியும் நாம் வாக்களிக்க கூடிய நிலையில் இல்லை” என, முல்லைத்தீவில் 281ஆவது நாளாக போராடும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தாயொருவர், “மீள்குடியேற்றம் வந்தவுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வந்தார். நாங்கள் எங்களுடைய பிள்ளைகள் எங்களுக்கு கிடைக்கும் என்று நம்பிக்கையோடும் எங்களுக்கு ஒரு விடுதலை கிடைக்கும் என்ற ஒரு ஆவலுடனும் வாக்களித்தோம். ஆனால், எங்களுக்கு எந்த முடிவும் கிடைக்கவில்லை.

“அதனைத் தொடர்ந்து, அதேபோல் எங்களுடைய மைத்திரி ஜனாதிபதியாக வந்தார். அவரையும் நாங்கள் எதிர்பார்த்தோம். அவரும் அதையே செய்தார். திரும்பவும் இப்போது எங்களிடம் வந்து வாக்கு கேட்கின்றனர். ஆனால் நாங்கள் வாக்களிக்க கூடிய நிலையில் இல்லை” எனத் தெரிவித்தார். (ச)

## இன்று நாளும் கோளும்

14.12.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 28 ஆம் நாள்

ஏகாதசி காலை 06.35 மணி வரை | சுவாதி பகல் 01.42 மணி வரை | சித்தயோகம்

இராகு காலம் 1.30 - 03.00 | சுபநேரம் 10.45 - 11.15 | எமகண்டம் 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆரோக்கியம் | உதவி | அலைச்சல் | ஆக்கம் | குழப்பம் | ஜெயம் | பரிசு | புகழ் | அமைதி | நன்மை | ஓய்வு | கவனம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களின் நிலை

# புலிகளின் காலத்தில் பலம் போரின் பின்னர் அவலம்

## அமைச்சர் அனந்தி கவலை

வவுனியா, டிசெ.14

"புலிகளின் காலத்தில் பலமாக இருந்த பெண்களை இன்று எளிதாக ஏமாற்றி விடலாம் என்ற நிலையை இந்த யுத்தம் ஏற்படுத்தியுள்ளது." என்று, பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்து பேசும்போது வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் 2017 ஆம் ஆண்டிற்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 34 பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கு 16 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியிலான வாழ்வாதார உதவித்திட்டங்களை மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் கடந்த 8 ஆம் திகதி வழங்கி வைத்தார். அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



"வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில், பெயரளவிற்கு மாகாண சபையை நிறுவியுள்ள மத்திய அரசானது தனது தேசிய கட்டமைப்புக்களினூடாக திட்டங்களை நடைமுறைப் படுத்த எத்தனித்து வருகின்றமையானது அதனைத் திட்டமிட்டு முடக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

மகளிர் விவகாரம், புனர்வாழ்வு ஆகிய அமைச்சின் செயற்பாடுகளை வடமாகாணத்துக்கூடாக மேற்கொள்வதற்கு வசதியாக தனித்தான அலகொன்றை ஏற்படுத்தித்தருமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். அவ்வாறு தனி அலகொன்று உருவாக்கப்பட்டால் தான் இவ்விடயங்கள் தொடர்பான செயற்பாடுகளை ஒருமுகப்படுத்திக் கையாள முடியும்.

அத்துடன் அதற்கென தனித்தான ஆளணியொன்றையும் அமைப்பதன் மூலமே பாதிக்கப்பட்டவர்களை நேரடியாகச் சந்தித்து உண்மை நிலைகளை அறிந்து திட்டங்களை சரியான முறையில் வகுத்து நடைமுறைப்படுத்த முடியும். அவ்வாறான ஆளணி இன்மையால் ஏற்கனவே ஏதோவொரு வகையில் சில உதவிகளைப் பெற்றவர்களுக்கே திரும்பவும் உதவிகளை கொடுக்கும் நிலை ஏற்படுகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்துக்குட்பட்ட பெண்களை தலைவர்களாகக் கொண்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதென்பது சவாலான விடயமாக உள்ளது. அதற்கு முதல் காரணம் மத்திய அரசு போதுமான நிதியை வழங்காமையே ஆகும்.

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட யுத்தம் எமது பெண்களை பலவீனமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. புலிகளின் காலத்தில் பலமாக இருந்த பெண்களை இன்று எளிதாக ஏமாற்றிவிடலாம் என்ற நிலையை இந்த யுத்தம் ஏற்படுத்தியுள்ளது. இவ் அவலநிலையை வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வறுமை நிலையே அதற்கு முதற்காரணமாகும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# சட்டவிரோத மது ஐந்து பேர் கைது

கிளிநொச்சி, டிசெ.14

கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தியிலீடுபட்ட 5 சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய கட்டைக்காடு மற்றும் இரட்டைப்பனைக்குளம் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் விசேட சுற்றிவளைப்பொன்று மேற்கொள்ளப் பட்டது.

குறித்த சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டனர். இதன்போது, 300 லீற்றர் மதுபானம் உள்ளிட்ட தடயப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றினர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களையும், தடயப்பொருட்களையும் தர்மபுரம் பொலிஸார் நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். (அ)

# வவுச்சர் வர்த்தகர்கள்: மாணவரே அவதானம்!

கொழும்பு, டிசெ.14

பாடசாலை இறுதித் தவணை விடுமுறையின் போது மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சீருடைத்துணிக்கான வவுச்சர்களை சில வர்த்தகர்கள் பலவந்தமாகப் பெற்றுக் கொண்டு தரம் குறைந்த சீருடைத் துணியைத் திணிப்பதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீருடைக்கான வவுச்சர்களைப் பாடசாலைகளில் பெற்றுக் கொண்டு மாணவர்கள் வீடு நோக்கிச் செல்லும் போது , சில புடவைக் கடை வியாபாரிகள் மாணவர்களை வழி மறித்து, அவர்களிடமிருந்து வவுச்சர்களைப் பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக வெள்ளைத் துணிகளை வழங்கியுள்ளனர். இவ்வாறு பலவந்தமாக வவுச்சரைப் பெற்றுக் கொண்டு வியாபாரிகளால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சீருடைத் துணிகள் சில தரங்குறைந்தவையாக இருந்ததாகப் பெற்றோர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் கல்வி அமைச்சின் அவசரத் தொடர்புக்காக 1988 என்ற இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்தி முறைப்பாடு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே 'வவுச்சருக்குப் பாடசாலைச் சீருடைத் துணி' எனும் பதாதைகளை வாகனங்களில் தொங்கவிட்ட படி இடம் பெயர் துணிக்கடைகளும் நடமாடத் தொடங்கியுள்ளன. அரசாங்கத்தால் மாணவர்களுக்கான சீருடைத் துணிக்காக வழங்கப்படும் வவுச்சர்களை அபகரிக்கும் வகையில் அதிபர்களோ, வர்த்தகர்களோ மாணவர்களையும் பெற்றோரையும் வற்புறுத்தக் கூடாது எனக் கல்வி அமைச்சு கடந்த மாதம் 30ஆம் திகதி வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தது. அவ்வாறான எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் ஆங்காங்கே முறைகேடுகள் நடைபெறுகின்றமை குறிப்பிடத் தக்கது. (அ)

# தேர்தல் ஆணையகத்துக்கு யாழ்ப்பாணத்தில் அலுவலகம்

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ். மாவட்டத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் காரியாலயத்துக்குப் புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான அனுமதி நேற்று புதன்கிழமை வழங்கப்பட்டது.

நிகழ்கால மற்றும் எதிர்காலத் தேவைகளைக் கவனத்திற் கொண்டு யாழ். மாவட்டத் தேர்தல் காரியாலயத்துக்கு நான்கு மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்று நிர்மாணிக்கப் படவுள்ளது.

இதற்காக 97.7 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)



## முதல் பெற்றார் ஒழுக்கம் எண்டால் என்ன எண்டதைப் பழகுங்கோ!

இண்டைக்குப் பேப்பர் கடையிலை பெரிய விவாதமாப் போச்சுது. முதலி சொன்னான், சங்கரி முதன்முதலிலை சைக்கிளிலை கேட்டுத்தான் எம் பியா வந்தவரெண்டான். சங்கத்திலை வேலை செய்யிற மயிலைநாதன் சொன்னான் அவர் ஆதியந் தொட்டு வீட்டிலை கேட்டுத்தான் வந்தவர். அவர் ஒரிஜினல் வீட்டுக் காரன் எண்டு. இப்பிடிச் சண்டை பிடிச்சுக் கொண்டு நிக்கேக்கை சிவராசா வந்தான். அவன் அடிக்கடி கொழும்பு, வெளிநாடு எண்டு போறவன். உள்ளூராட்சி அமைச்சிலை வேலை.

அவன் சொன்னதைக் கேக்க ஈரல் குலை நடுங்கிச்சிது. அவன் சொன்னான் இருபாலைக்கும் கள்ளியங்காட்டுக்கும் இடைப்பட்ட ஒரு கோயிலுக்குக் கிட்ட ஒரு ஒழுங்கேக்கை எந்த நாளும் பள்ளிக்கூடப் பெடியள் கொஞ்சம் வருவினமாம். கையிலை ஒரு சரையோடை. அதை அடிபிடிப்பட்டுப் பங்கிடுவினமாம். வாயுக்கை வச்சுக் கொண்டு சைக்கிளிலை ஏறிப் போவிடுவினமாம். தன்ரை சிநேகிதன்ரை வீட்டுக்குப் பக்கத்திலைதான் இந்த விளையாட்டு எந்த நாளும் நடக்குதாம். பாத்தால் ஏதோ பச்சை நிறமாக் கிடக்குதாம். போதைப் பொருள் போலையும் கிடக்கிது எண்டு சொன்னான்.

அந்தக் கிறவுட்டின்ரை போக்குச் சரியில்லாத மாதிரிக் கிடக்குதாம். பாரனெடா அவையின்ரை தடிப்பை! தாய், தேப்பன் நம்பி அவைக்குப் படிக்கக் கொப்பி, புத்தகம் வாங்கிக் குடுத்து பள்ளிக் கூடக் காசையும் கட்டிவிட்டு, சைக்கிள் ஒண்டையும் எடுத்துக் குடுத்து விட, அவை பொறுப்பு ஒண்டும் இல்லாமல் தங்கடை பாட்டுக்குச் சேட்டை விடுகினம் போலை கிடக்கு. அதைவிட ரியூசனுக்குப் போறதுக்குப் பிறிம்பாக் காசு வேறை குடுக்கினம். சிலபேருக்கு வளர முன்னம் கான்போனும் வேண்டிக் குடுத்திருக்கினம்.

ஏன் இப்ப படிக்கிறவைக்குக் கான் போன் வேண்டிக் குடுத்தனீங்கள் எண்டு கேட்டால் ஆத்திர அவசரத்துக்கு அவை எங்களுக்கு ஒரு கோல் எடுப்பினமெல்லே – எண்ட வியாக்கியானம் வேறை. எட நீங்கள் படிக்கிற காலத்திலை உங்கடை கொப்பர், கோச்சி கான்போன் வேண்டித் தந்தே பள்ளிக்குடத்துக்கு அனுப்பினவை? எண்டு கேட்டால், "அப்ப மாதிரியே இப்ப, காலம் மாறிப் போச்சுதெல்லே, அதுக்கேத்த மாதிரி நாங்களும் மாறவெல்லே வேணும் " – எண்ட மறுமொழி வேறை.

பிள்ளையளைத் தாய், தேப்பன் அன்பா வளக்கத்தான் வேணும். இல்லையெண்டு சொல்லேல்லை. அதுக்குக் கேக்கிற கண்ட கண்ட சாமான்களையெல்லாம் வேண்டிக் குடுத்துக் குழந்தையளைக் குட்டிச் சுவராக்கிறது தாய், தேப்பன் போலைதான் கிடக்கு. செல்லங் குடுக்கிறதா நினைச்சு அதுகள் போற போக்கிலை வளத்தால் அதுகள் போதை வஸ்தும் போடுவினம், போத்தில் அடிச்சுப் போட்டு எங்கேயும் கான், கரையிலை விழுந்தும் படுத்துமிருப்பினம். பிறகு ஓட்டோவைப் பிடிச்சுத் தூக்கிக் கொண்டு வாங்கோவன் வீட்டுக்கு.

முந்தி ஒரு காலத்திலை குடிக்கிற ஆக்களைக் கழிச்சு வைச்சுச் சீவிச்ச சமூகம் எங்கடை தமிழ் சமூகம். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி எண்டு எல்லாம் அரிவரியிலையே படிப்பிச்சுப் போடுவினம். பிறகு கொஞ்சக் காலத்துக்குப் பிறகு தீட்சை எடுக்கச் சொல்லி ஆசாரத்தோடை சீவிக்கப் பழக்குவினம். மனுசத் தன்மையாய்ச் சீவிக்கிறது எப்பிடி எண்டு எல்லாரும் சொல்லித் தருவினம். எல்லாரும், எல்லாருக்கும் மரியாதையாயிருந்தம். பள்ளிக்குட வாத்தியாரைக் கலியாண வீடு, பூசை வீடு, திருவிழா எண்டு எங்கை சந்திச்சாலும் எங்களுக்குப் பயந்தான். ஏதாவது இடக்கு முடக்கா நடந்ததை கண்டால் மற்ற நாள் பள்ளிக்குடத்திலை விழும் சரியான பூசை. ஒண்டிலையும் தப்பேலாது. ஆச்சி, அப்புவும் ஒண்டுஞ் சொல்லாயினம். நல்லா குடுங்கோ வாத்தியார் எண்டு இன்னும் உசுப்பேத்திவிடுவினமே ஒழிய "என்ரை பிள்ளைக்கு அடிக்கப்படாது" எண்டு ஒரு சொல்லுச் சொல்ல மாட்டினம்.

இப்ப அப்பிடியே எல்லாம் நடக்கிது? பெடி பெட்டையளுக்குப் பயபக்தி இல்லை. பெடி பெட்டையளைப் பாத்தால் வாத்தியாரை வகுப்பிலை வைச்சு அடிப்பங்கள்போலை கிடக்கு அதுக்கேற்ற மாதிரிச் சட்டங்களும் அப்பிடி. "பிள்ளையளுக்கு அன்பாலை சொல்லுங்கோ, அடியாதையுங்கோ" எண்டால் இஞ்சை இருக்கிறதெல்லாம் என்ன தேவலோகத்துப் பிள்ளையளே? சின்ன வயசிலையே கழிசறைப் பழக்கங்களோடை பள்ளிக்கு வருகுதுகள். வீட்டிலை தாய், தேப்பனும் இப்ப பிள்ளையளுக்கு நல்லது கெட்டது சொல்லிக் குடுக்கிறதும் இல்லை. பிள்ளையளோடை அவையும் சரிக்குச் சமமாய் இருந்து கதையும், ரீவியும். எப்பிடிப் பிள்ளையள் ஒழுக்கமா வாறது? நான் எல்லாரையும் சொல்லேல்லை. அப்பிடி நினைக்க வேண்டாம்.

முதல் பெற்றார் ஒழுக்கம் எண்டால் என்ன எண்டதைப் பழகுங்கோ. பிள்ளையள் தனாத் திருந்துவினம். எல்லாம் வில்லங்கந்தான். ஏதோ தெண்டிப்பம், என்ன?

- வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ அதிகாரிக்கு தமிழர்கள் நேரில் அஞ்சலி



கொழும்பு,டிசெ.14

பணியில் ஈடுபட்டிருந்த போது திடீர் விபத்தொன்றில் உயிரிழந்த இராணுவ அதிகாரியொருவரின் இறுதிச் சடங்கில் வட மாகாணத் தமிழ் மக்கள் சிலர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பங்கேற்றனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் படை முகாமில் சேவையாற்றிய லான்ஸ் கோப்ரல் ஆர்.எம்.ஜே.குமார என்பவர் கடந்த 8ஆம் திகதி விபத்தொன்றில் உயிரிழந்தார். உயிரிழந்த இராணுவ அதிகாரியின் இல்லத்துக்குச் சென்று, அவரின் சடலத்துக்கு முல்லைத்தீவு மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மேலும் அவர்களுக்குத் தேவையான வசதிகளை மத்திய மாகாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நிஸ்ஸங்க ரணவக்க வழங்கியுள்ளதோடு அவர்களைக் கண்டி தலதா மாளிகைக்கு அழைத்துச் செல்லவும் இராணுவத்தினர் நடவடிக்கை ஏற்பாடு செய்தனர். (எ)

## அந்த நாள் ஞாபகம்




**15.12.1899**

யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையை தனியாரிடம் இருந்து இலங்கை அரசாங்கம் பொறுப்பெடுத்துக் கொண்டது.

## நால்வருக்கு 2 வருடச் சிறை

திருகோணமலை,டிசெ.14

திருகோணமலை - மொறவெவ பகுதியில் கடந்த 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வருக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரண்டு வருடக் கட்டாய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தண்டனை வழங்கப்பட்ட நால்வரும் கந்தளாய் மற்றும் முள்ளிப்பொத்தானை பகுதியைச் சேர்ந்த 49, 42, 41 மற்றும் 40 வயதுடையவர்களாவர்.

2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொறவெவ பகுதியிலமைந்துள்ள கடையொன்றிலும், வீடொன்றிலும் அவர்கள் கொள்ளையிட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## ஆள் நடமாட்டமில்லாத இடத்தில் மாணவியைத் தொட்ட ஆசிரியர்

முல்லைத்தீவு,டிசெ.14

முல்லைத்தீவில்பாடசாலை மாணவியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சிக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் நேற்று புதன்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டது.

தற்போது நடைபெற்றுவரும் சாதாரண தரப் பரீட்சை தொடர்பில் விளக்கமளிக்கும் மேலதிக வகுப்புக்குச் சென்ற மாணவி, வகுப்பு முடிந்து 7 மணியளவில் தனியாக வீடு செல்ல ஆயத்தமானார். அப்போது மாணவியை மோட்டார் வாகனத்தில் அழைத்துச் சென்று விடுவதாகக் கூறிய ஆசிரியர், மாணவியை அழைத்துச் சென்றார்.

பின்னர், ஆள் நடமாட்டமற்ற இடத்தில், துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபட முயற்சித்துள்ளார். எனினும், இதிலிருந்து தப்பித்த மாணவி வீட்டுக்குச் சென்று, உறவினர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்தே பொலிஸ் நிலையத்தில் மாணவியின் தாயார் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி முல்லைத்தீவு விசுவமடு பிரதேசத்தின் மேலதிக வகுப்பாசிரியரினாலேயே இவ்வாறு துஷ்பிரயோக முயற்சி அரங்கேற்றப்பட்டுள்ளது. (எ)

## அடேங்கப்பா!




கொழும்பு,டிசெ.14

கொழும்பிலுள்ள உணவகம் ஒன்றில் 3 சொஸேஜ் ரோல்ஸ், 3 மரக்கறி பணிஸ் மற்றும் 4 மீன் பணிஸ் கொள்வனவு செய்தமைக்காக 3908.40 ரூபாயும், அதற்கு சேவைக் கட்டணமாக 300 ரூபாயும் நேற்று புதன்கிழமை அறவிடப்பட்டுள்ளது.

பொதுவாக இதனைப் பெரிய உணவகங்களில் கொள்வனவு செய்திருந்தாலும் இவ்வளவு பெரிய தொகை அறவிடப்பட்டிருக்காது.

சில இடங்களில் கட்டுப்பாட்டு விலை இல்லாமையினால் இவ்வாறு அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ரேக் எவே எனப்படும் உணவுகளைப் பார்சலாக வழங்கும் உணவகத்திலேயே உணவு கொள்வனவு செய்யப்பட்டது. எடுத்துச் செல்லும் உணவுகளுக்காக எதற்காக சேவைக் கட்டணம் அறவிடப்படுகிறதென்பதே தற்போதைய மிகப்பெரிய சிக்கலாகியுள்ளது. எனினும் இவ்வாறான உணவகங்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாத நிலையே காணப்படுவதாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. (எ)

# கிளி.யில் கட்டுப்பணம் செலுத்தியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



கிளிநொச்சி,டிசெ.14

தமிழ் தேசிய மக்கள் முன்னணி கிளிநொச்சி மாவட்டத் தேர்தல் செயலகத்தில் நேற்று புதன்கிழமை முற்பகல் கட்டுப்பணத்தைச் செலுத்தியது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் தலைமை யில் கரைச்சி, பூநகரி, பச்சிலைப் பள்ளி பிரதேசசபைக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. மேலும் "தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முதல் முதலாக பிரதேச சபைத் தேர்தல்களில் போட்டியிடுகின்றது. இது வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் மக்களுக்கு எதுவும் செய்யப்படவில்லை.

இந்த நிலையில் மக்களின் அபிவிருத்தி மற்றும் உரிமைகளுக்காக நாம் தேர்தலில் போட்டியிடுவதற்குக் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளோம்" என ஜெகதீஸ்வரன் தெரிவித்தார். (எ)

## காலாவதியான உணவுக்கு 5,000 ரூபா தண்டம்!

முல்லைத்தீவு,டிசெ.14

முல்லைத்தீவு நகரை அண்மித்த பகுதியில் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனைக்காக காட்சிப்படுத்திய இரண்டு வர்த்தகர்களுக்கு தலா 5,000 ரூபா தண்டப்பணம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் சம்சுதீன் முன்னிலையில் நேற்று முன்தினம் விதிக்கப்பட்டது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது காலாவதியான உணவுப்பொருட்களை விற்பனைக்காகக் காட்சிப்படுத்திய இரண்டு வர்த்தகர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையிலேயே தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (எ)

## விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு,டிசெ.14

கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி.தசநாயக்க உட்பட 7 கடற்படையினரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவு பிறப்பித்தது.

2008ஆம் ஆண்டு வெள்ளை வானில் 11 இளைஞர்களைக் கடத்திச்சென்று காணாமல் போகச் செய்த சம்பவம் தொடர்பாக டி.கே.பி. தசநாயக்க உட்பட 7



கடற்படையினரையே குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கைது செய்து வழக்குத் தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## நம்பிக் காத்திருக்கும் முல்லை மக்கள்

முல்லைத்தீவு,டிசெ.14

முல்லைத்தீவு - கேப்பாப்புலவு மக்களின் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் 287ஆவது நாளாக நேற்றுப் புதன்கிழமையும் நீடித்தது.

கேப்பாப்புலவு பகுதியில் படையினர் வசமிருக்கின்ற தமது பூர்வீக நிலங்களை விடுவிக்கக்கோரி கடந்த பெப்ரவரி மாதம் முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமக்குப் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதும், எதுவும் நிறைவேற்றப்படவில்லை எனக் கேப்பாப்புலவு மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், எதிர்வரும் 31ஆம் திகதி குறித்த காணிகளை முழுமையாக விடுவிப்பதாக மீள்குடியேற்ற அமைச்சரால் தெரிவிக்கப்பட்டுள்ளமையால், மலரவுள்ள புதிய ஆண்டில் தமது மண்ணில் குடியேறி வாழலாம் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர் அங்குள்ள மக்கள். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli

வியாழன், 14 டிசெம்பர் 2017

# கடை உடைத்து திருட்டு


கிளிநொச்சி, டிசெ. 14

கிளிநொச்சி நகரில் அண்மைக்காலமாக வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டு பணம் பொருட்கள் திருடப்படுகின்றன.

நேற்று முன்தினம் கனகபுரம் வீதியில் உள்ள தொலைபேசி நிலையம் ஒன்றை உடைத்த திருடர்கள் அங்கிருந்து 4 கைபேசிகள், மீள்நிரப்பு அட்டைகளை திருடிச் சென்றுள்ளனர்.

கனகபுரம் வீதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களே இவ்வாறு தொடர்ச்சியாக உடைக்கப்படுகின்றன. இதுவரை பதினைந்துக்கும் அதிகமான கடைகள் இப்பகுதியில் உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச)




# காங்கேசன்துறை துறைமுகத்தை மீளமைக்க அனுமதி

கொழும்பு, டிசெ. 14

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்துக்குத் தேவையான பொருட்களை பரிமாறுவதற்காக காங்கேசன்துறை துறைமுகம் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

இதனை மறுசீரமைப்பு செய்வதற்கான முன்மொழிவுகளை இலங்கை துறைமுக அதிகார சபை முன்வைத்துள்ளது. இங்கு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உகந்த வகையில், அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்ப கட்டுமானங்களை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அதற்கு தேவையான 50 ஏக்கர் காணியினை இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திடம் இருந்து இலங்கை துறைமுக அதிகார சபைக்கு பெற்றுக் கொள்வது தொடர்பில் துறைமுக மற்றும் கப்பல்துறை விவகார அமைச்சர் மஹிந்த சமரசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# தொடர்ச்சிகள்

## பழிவாங்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஈடுபட்டதால், மாணவிகள் இருவர் கொடுமைப்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அதனையடுத்து சந்தேகநபரான ஆசிரியர் கைது செய்யப்பட்டார். அத்துடன் சம்பவத்தை மூடி மறைத்த அதிபர் உட்பட சில ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் சம்பவத்தை வெளிப்படுத்திய சங்கீத ஆசிரியை மீது பழிவாங்கல் நடவடிக்கை ஆரம்பமானது. அவர் மீது கல்வித் திணைக்களத்தால் ஒழுக்காற்று விசாரணை முன்னெடுக்கப்பட்டது. அதன் நிறைவில் கடந்த நவம்பர் 11ஆம் திகதி ஒழுக்காற்று காரணங்களின் அடிப்படையிலான இடமாற்றம் எனக் குறிப்பிட்டு சங்கீத ஆசிரியைக்கு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இடமாற்றக் கடிதம் அனுப்பிவைத்தார்.

அந்தக் கடிதத்தில் " முறையான ஒழுக்காற்று விசாரணை முடிவுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யப்படல் வேண்டும் என்ற பரிந்துரைக்கு அமைவாக 01.01.2018 இலிருந்து செயற்படும் படியாக தாங்கள் கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றீர்கள். அத்துடன் தங்களுடைய சேவைக்காலத்தில் மீண்டும் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனையுடன் இந்த இடமாற்றம் வழங்கப்படுகின்றது" என்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனை எதிர்த்து குறித்த சங்கீத ஆசிரியை மேல் நீதிமன்றில் இடமாற்றத்தை நிறுத்தக் கோரி மனுத் தாக்கல் செய்தார். இந்த மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

"தங்களுடைய சேவைக்காலத்தில் மீண்டும் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனையுடன் இந்த இடமாற்றம் வழங்கப்படுவதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளமை எதிர்காலத்துக்கு வழங்கப்படுகின்ற தண்டனையாக முதல் தோற்றளவில் காணக்கூடியாகவுள்ளது.

இந்தப் பந்தி குடிமகன் ஒருவரின் உரிமையை மீறுகின்ற செயற்பாடாக மன்று முதல் தோற்றளவில் கருதுகின்றது. எனவே இந்த இடமாற்றக் கடிதத்தை நடைமுறைப்படுத்த இடைக்காலத் தடைவிதிக்கப்படுகிறது. இந்தத் தடை உத்தரவு வரும் ஜனவரி 10ஆம் திகதிவரை நடைமுறையிலிருக்கும்.

இந்த இடைக்காலக்காலத் தடைகட்டளையையும், எதிர் மனுதாரர்களான வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் ஆகியோரை எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதி மன்றில் முன்னிலையாக அழைப்புக் கட்டளையும் உடனடியாக அனுப்பி வைக்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிடப்படுகிறது" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளையிட்டார். (அ)

## வழக்கு விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவாளர் திருமதி மீரா வடிவேற்கரசன் மற்றும் உத்தியோகத்தர்கள் நேரில் சென்று உயர் நீதிமன்றப் பிரதிப் பதிவாளர் சட்டத்தரணி கிரிஷானி டி கோத்தகொடயிடம் கையளித்தனர்.

ட்ரயல் அட் பாரின் தீர்ப்பு மூல வழக்கேடு 3 ஆயிரத்து 540 பக்கங்களைக் கொண்டது. அத்துடன், ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றின் வழக்கேடு ஆயிரத்து 53 பக்கங்களைக் கொண்டது. இந்த இரண்டு வழக்கு ஏடுகளையும் இணைத்து 4 ஆயிரத்து 540 பக்கங்களை உடைய 15 பிரதி வழக்கேடுகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் தயாரிக்கப்பட்டன.

இவற்றில் 14 பிரதி வழக்கேடுகளும் மூல வழக்கு ஏடுகளுமே நேற்று உயர் நீதிமன்றில் கையளிக்கப்பட்டன. ஒரு பிரதி வழக்கேடு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பேணப்படுகிறது.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்குடன் தொடர்புடைய 7 குற்றவாளிகளுக்கு மரண தண்டனையும், 30 ஆண்டு கடூழிய சிறையும் விதிக்கப்பட்டது.

இதற்கு எதிராக எழுவரும் உயர்நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## மருத்துவத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் ஆகிய தரப்புகளுக்கு இடையில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த கற்கை நெறிகளுக்காக பல்கலைக்கழகத்துக்கு இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்கள் இந்நாட்டின் க.பொ.த. உயர்தர பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் பாடங்களில் ஆகக்குறைந்த திறமைச் சித்தி (சி) சித்திகள் இரண்டையும் சாதாரண சித்தி (எஸ்) ஒன்றையும் ஒரே தடவையில் பெற்றிருக்க வேண்டும் என்பதே, ஆகக்குறைந்த தகைமைகள் என, அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இதனடிப்படையில், இலங்கை மருத்துவக் கல்விக்கான ஆகக்குறைந்த தரத்தை வைத்திய கட்டளைகள் சட்டத்தின் கீழ் அமைகின்ற ஒழுங்கு விதிகளாக, அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவது தொடர்பில், சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்து அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்னவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச)

## போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே அதிகளவான போதைப் பொருள்கள் கடத்தப்படுகின்றன. அவற்றைப் பொலிஸார் மறிப்பதுமில்லை - சோதனை செய்வதுமில்லை.

இப்படிப் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும் யாழ். - கொழும்பு பயணிகள் சேவை நடத்துபவருமான தி. துவாரகேஸ்வரன்.

யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயத்தை அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் கடந்த சில வாரங்களாகப் பொலிஸார் கடும் சோதனைக் கெடுபிடிகளில் ஈடுபடுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டிய அவர், போதைப் பொருளை காரணம் காட்டியே இந்தக் கெடுபிடிகள் இடம்பெறுகின்றன என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், இராணுவம் நடத்தும், அனுமதி பெறாத பேருந்து சேவைகளில் ஈடுபடுவோரே போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுகின்றனர். இவர்களைப் பொலிஸார் சோதிப்பது இல்லை. பெருமளவான போதைப் பொருள்களை இராணுவமே பேருந்துகளில் கடத்துகின்றது. இது பொலிஸாருக்கும் தெரியும். ஆனால் அவர்கள் எதுவும் செய்வதில்லை எனவும் கூறினார். (ச)

## ஆணையாளர்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை ஜனாதிபதிக்கு முன்மொழிந்தது. இவ்வாறு பரிந்துரைக்கப்பட்டவர்களில் நால்வர் சிங்களவர்கள் என்றும், இருவர் தமிழர்கள் என்றும், ஒருவர் முஸ்லிம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஜெயதீபா, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளரான கணபதிப்பிள்ளை வேந்தன் ஆகிய இரு தமிழர்களும், மீராக் ரகீம் என்ற முஸ்லிம் ஒருவருமே காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணையாளர் பதவிக்களுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள தமிழ் பேசுவோராவர். (ச)

## ரயில் சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனால் நேற்று மாலையுடன் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் கைவிடப்பட்டது. இதையடுத்து சில ரயில்கள் இயக்கப்பட்டன. ஆனால் தூர இடங்களுக்கான ரயில் சேவைகள் இடம்பெறவில்லை.

இன்று அதிகாலை தொடக்கம், நேர அட்டவணையின் பிரகாரம் ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பின. தபால் ரயில் சேவைகளும் இன்றிரவு தொடக்கம் வழமைக்குத் திரும்பும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

## 56 ஆண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் தொடர்பில் சிமியன் சந்திரயோகி, சிறில் இராசமணி, முத்து மரிக்கார் அப்துல் சலீம், சின்னப்பன் பாக்கியநாதன், சாந்தன் ஸ்ரேனிஸா ரமேஷ், இராகவன் சுரேஷ் மற்றும் ஒருவர் அடங்கலாக 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

2011 ஆம் ஆண்டு முதல் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு எதிராக பயங்கரவாதச் செயல், சதித்திட்டம், உயிரிழப்புக்குக் காரணம் என எட்டுக் குற்றங்கள் சுமத்தப்பட்டு, அனுராதபுரம் சிறப்பு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர்களின் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனடிப்படையிலேயே நீதிபதி மஹேஸ் வீரமன் இத்தீர்ப்பை நேற்று வழங்கினார். (ச)

## நீடிக்கிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி இன்னமும் வழங்கவில்லை. அவற்றில் கட்சிக்கு இரண்டு வருடங்கள் ஆட்சி எனப் பேச்சு இடம்பெற்று வருகின்றது.

வலி. தெற்கு பிரதேச சபையை பங்கிட சம்மதித்த புளொட், வலி. மேற்குப் பிரதேச சபையை விட்டுக் கொடுக்கவோ, பங்கீடு செய்யவோ சம்மதிக்கவே இல்லை. இந்நிலையில் இச்சபையை தமிழரசுக் கட்சிக்கு புளொட் விட்டுக் கொடுத்து விட்டதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை எனப் புளொட் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ரெலோவுக்கு வழங்கப்பட்ட மன்னார் நகர சபையை தமிழரசுக் கட்சிக்கு வழங்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ரெலோ கட்சியினருடன் நேற்றுப் பேச்சு நடத்தினார். ஆனால் ரெலோ அதற்கு சம்மதிக்கவில்லை. இதனால் அவர் பேச்சில் இருந்து இடையிலேயே விலகிச் சென்றார் எனக் கூறப்படுகின்றது. (ச)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் குற்றச்சாட்டு

## 54 பெண் எம்.பி.க்கள் சுமத்தினர்






நியூயோர்க்,டிசெ.14

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்பேற்று அவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று 54 பெண் எம்.பிக்கள் நேற்று புதன்கிழமை வலியுறுத்தினர்.

கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றார். அதிபர் தேர்தலில் அவர் போட்டியிட்ட போதே, அவர் மீது பல்வேறு பாலியல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனிடையே, அவருக்கு தெதிராக 16 பெண்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பாலியல் குற்றச்சாட்டுகளை வெளிப்படையாகத் தெரிவித்தமையால் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆனால், எந்த விசாரணை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விவகாரத்தில் வெளிப்படையாக விசாரணை நடத்தக் கோரியும், அதிபர் ட்ரம்ப் பதவி விலகுமாறும் வலியுறுத்தி அந்த நாட்டுப் பெண்எம்.பிக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இது தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றத்தின் கண்காணிப்பு மற்றும் அரசு சீர்திருத்தங்கள் குழுத் தலைவருக்கும் அவர்கள் எழுதிய கடிதத்தில், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 54 பெண் எம்.பிக்கள் கையெழுத்திட்டனர். (எ)



# பூமிக்கருகில் வந்துபோன வேற்றுக் கிரக விண்கலம்

நியூயோர்க்,டிசெ.14

கடந்த ஒக்ரோபரில் பூமிக்கு மிக அருகில் நீள் வடிவ மர்மப் பொருள் ஒன்று மணிக்கு 1,96,000 மைல் வேகத்தில் கடந்து சென்றது. அந்த மர்மப் பொருள் வேற்றுகிரக விண்கலமாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

ரஷ்யாவைச் சேர்ந்த கோடீஸ்வரர் யூரி மில்னர் வேற்றுகிரக ஆராய்ச்சிக்காகப் பெரும் தொகையைச் செலவிட்டு வருகிறார். அவரளிக்கும் நிதியுதவியில் அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் வேற்றுகிரகவாசிகள் குறித்து சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆய்வு நடத்தி வருகின்றனர்.

கடந்த ஒக்ரோபரில் பூமிக்கு மிக அருகில் ஊசி வடிவிலான நீள்வட்ட மர்மப் பொருள் மணிக்கு 1,96,000 மைல் வேகத்தில் கடந்து சென்றது. அந்த மர்மப் பொருள் அமெரிக்காவின் ஹவாயில் உள்ள பேன் ஸ்டார்ஸ்-1 தொலைநோக்கியில் பதிவாகியுள்ளது.

இது குறித்து ஹார்வர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் அவி லோப் கூறிய போது,

"மர்ம பொருள் சிவப்பு நிறத்தில் சுமார் 400 மீற்றர் நீளம் கொண்டதாக விருந்தது. அது வேற்றுகிரக விண் கலமா என்பது குறித்து ஆய்வு செய்கிறோம். அந்த மர்மப் பொருள் நமது தொலைநோக்கிகளின் கண்ணுக்குப் புலப்படாத தொலைவுக்குச் சென்று விட்டது. எனினும் அமெரிக்காவின் கிரீன் பேங்கில் உள்ள உலகின் மிகப் பெரிய தொலைநோக்கி மூலம் மர்ம பொருளில் இருந்து ஏதாவது ரேடியோ சிக்னல்கள் கிடைக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்து வருகிறோம்" எனத் தெரிவித்தார். (எ)

# கிராமத்துப் பெண்ணாக மாறிய சமந்தா!



சென்னை,டிசெ.14

இதுவரையில் நகரத்துப் படங்களில் மட்டும் நடித்து வந்த நடிகை சமந்தா தற்போது ராம்சரணுக்கு ஜோடியாகக் கிராமத்துப் படமொன்றில் நடித்து வருகிறார். இந்தப் புகைப்படம் தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகிறது.

சமந்தா தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் கலக்கி வரும் ஹீரோயின். இவர் சமீபத்தில் தான் தெலுங்கு நடிகர் நாகசைதன்யாவைத் திருமணம் செய்தார்.

இந்த நிலையில் திருமணத்துக்குப் பிறகும் தொடர்ந்து பல படங்களில் நடித்து வருகின்றார்

இதில் கிராமத்துப் பெண்ணாகக் காட்சி தரும் சமந்தா மாடு மேய்ப்பது போலவும், வீட்டு வேலை செய்வது போலவும் ஒரு சில புகைப்படங்கள் வெளிவந்துள்ளது, இதுவரை அழகாக வெறும் பாடலுக்கு மட்டுமே ஆடிச்செல்லும் சமந்தாவை இப்படி பார்த்தவுடன் ரசிகர்களுக்கே அதிர்ச்சி தான். (எ)

# வெடித்தது மின்சார ஸ்கூட்டர் 5 பேர் உயிரிழப்பு



பீஜிங்,டிசெ.14

சீனாவின் பீஜிங் அருகேயுள்ள கிராமத்தில் மின்சார ஸ்கூட்டர் வெடித்துத் தீ விபத்து ஏற்பட்டதில் வீட்டில் இருந்த ஐந்து பேர் நேற்று புதன்கிழமை பரிதாபமாகப் பலியாகினர்.

சீனா தலைநகர் பீஜிங் அருகே உள்ள பைகியாசிங் என்ற கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் இருந்த மின்சார ஸ்கூட்டரிலிருந்து நேற்றுக் காலை திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. இதனையடுத்து, தீ வீடு முழுவதும் பரவியதாலேயே குறித்த விபத்து ஏற்பட்டது.

கடந்த மாதம் இதே நகரில் தெற்குப் பகுதியிலுள்ள குடியிருப்பு வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டதில் 19 பேர் பலியாகிமை குறிப்பிடத்தக்கது. (எ)

# வடகொரியாவில் அமெரிக்க டொலர்

நியூயோர்க்,டிசெம்பர்.14

தென்கொரிய வங்கிகளில் கண்டு பிடிக்கப்பட்ட அமெரிக்க டொலர் கள்ள நோட்டு, வடகொரியாவில் அச்சிடப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் தென்கொரியத் தலைநகர் சியோலில் உள்ள வங்கிக் கிளையில், 100 அமெரிக்க டொலர் கள்ளநோட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதனை ஆய்வு செய்த அதிகாரிகள், உண்மையான கரன்சி நோட்டுப் போலவே இருப்பதாகவும், அதிநவீன அச்சுத் தொழில்நுட்பத்தில் அது உருவாக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தனர். மேலும் கொரிய அதிகாரிகள் கூறுகையில், 'சூப்பர் நோட்டு' என்று கூறப்படும் இது போன்ற கள்ளநோட்டுகளை, வழக்கமான குற்றவாளிகள் கும்பல்களால் உருவாக்க முடியாது. ஏனெனில், இதுபோன்ற நோட்டுகளை உருவாக்கும் அச்சு இயந்திர வசதிகளை அமைக்க ரூ.600 கோடிக்கு மேல் செலவாகும். அவ்வளவு பெரிய முதலீட்டுத் தொகையில் எந்தக் கும்பலும் ஈடுபடுவது சந்தேகம் தான். வடகொரியாவின் மீது கடும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் அந்த நாடு இந்தக் கள்ளநோட்டை உருவாக்கியிருக்கலாம் என தெரிவித்துள்ளனர். (எ)

# துணைக் குற்றப்பத்திரிகையில் தினகரனும் கூட்டாளிகளும்

புதுடெல்லி,டிசெ.14

இரட்டை இலை சின்னம் பெற இலஞ்சம் கொடுக்க முயன்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் துணைக் குற்றப் பத்திரிகை நேற்று புதன் கிழமை தாக்கல் செய்யப்பட்டது.

இரட்டை இலைச் சின்னம் பெறத் தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றதாக டிடி.வி தினகரன் மீது டெல்லி குற்றப்பிரிவுப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்திருந்தனர். இது தொடர்பாகத் தினகரன் மற்றும் இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் டிடி.வி தினகரன் பிணையில் வெளியே வந்தார்.

குறித்த வழக்கில் கடந்த ஜூலை மாதம் டெல்லி திஸ் ஹசாரி நீதிமன்றத்தில் குற்றப் பிரிவுப் பொலிஸார் முதல் குற்றப்பத்திரிக்கையைத் தாக்கல் செய்தனர். இதில் சுகேஷ் சந்திரசேகரின் பெயர் மட்டும் இடம்பெற்றிருந்ததோடு துணைக் குற்றப்பத்திரிக்கையை டெல்லிப் பொலிஸார் தாக்கல் செய்தனர். அதில் தினகரன், அவரது நண்பர் மல்லிகார்ஜுனா உள்ளிட்ட ஐந்து பேரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. (எ)



# வைரலாகிய லாரன்ஸின் மனைவி



சென்னை,டிசெ.14

முதன்முறையாக நடிகர் ராகவா லாரன்ஸ்தன்னுடைய மனைவியின் புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.

நடிகர், இயக்குநர், நடன இயக்குநர் எனப் பல திறமைகளை கொண்டவர் ராகவா லாரன்ஸ். இவர் சினிமாவை தாண்டி பல குழந்தைகளின் படிப்புக்கும், ஆதரவற்றவர்களுக்கு உதவியும் செய்து வருகிறார்.

அத்துடன், ஜல்லிக்கட்டுப் பிரச்சினை போன்றவற்றுக்கும் தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் கொடுத்திருந்தார். இப்படிப் பல பிரச்சனைகளுக்கு குரல் கொடுத்து வரும் அவர் தனது அம்மாவிற்கு ஒரு கோயில் கூடக் கட்டியிருந்தார். இந்த நிலையில் இவரது மனைவியின் புகைப்படம் ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகி பலராலும் பகிரப்பட்டுவருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு நனவாகிறது

காபூல், டிசெ. 14

தனது முதலாவது டெஸ்ட் ஆட்டத்தை, இந்தியாவுக்கு எதிராக ஆப்கானிஸ்தான் விளையாடவுள்ளது.

இந்தியாவுக்கு எதிராகவே தமது டெஸ்ட் வாழ்க்கை ஆரம்பமாக வேண்டும் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை வெளிப்படுத்தியிருந்த நிலையில் அது தற்போது நிறைவேறவுள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமை அதிகாரி, ஆப்கானிஸ்கெதிராக இந்தியாவில் வைத்து இந்தியா விளையாடும் என்பதை உறுதிப் படுத்தியுள்ளார்.

எனினும் எந்த மைதானத்தில் ஆட்டம் நடைபெறும் என்றோ அல்லது மேலதிக தகவல்களோ வெளியாகவில்லை.

# பழிக்குப் பழி!



மொஹாலி, டிசெ. 14

ரோகித் சர்மாவின் சாதனை இரட்டைச் சதத்தால் அபார வெற்றி பெற்றது இந்திய அணி.

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி மொஹாலியில் நேற்று நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை இந்தியாவுக்குக் கொடுத்தது.

ரோகித் - தவான் இணை தொடக்கம் கொடுத்தது. 68 ஓட்டங்களுடன் தவான் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஸ்ரேயாஸ் ஐயர் ரோகித்துடன் சேர்ந்து சிறப்பாக ஆடினார். 88 ஓட்டங்களுடன் ஐயரும் வெளியேறினார். மறுபக்கத்தில் விஸ்வரூபம் காட்டிய ரோகித் சர்மா 153 பந்துகளில் 12 சிக்ஸர்கள், 13 பௌண்டரிகளை விளாசி இறுதிவரை ஆட்டமிழக்காது 208 ஓட்டங்களை சேர்த்தார். இது அவரின் மூன்றாவது இரட்டைச் சதமாகும்.

இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்களை இழந்து 392 ஓட்டங்களைப் பெற்றது. 393 ஓட்ட இலக்கைத் துரத்தியது இலங்கை அணி. மத்தியூஸ் மட்டுமே சிறப்பாக ஆடி சதமடித்தார். அவர்

132 பந்துகளை சந்தித்து 9 பௌண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 111 ஓட்டங்களை அவர் பெற்றார்.

ஏனைய வீரர்கள் பெரிதாக சோபிக்கவில்லை. 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 251 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

141 ஓட்டங்களால் வென்ற இந்திய அணி முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு இதன்மூலம் பழி தீர்த்துக் கொண்டது. (ச)



# ஜம்ஷெட்டுக்கு ஒரு வருட தடை

இஸ்லாமாபாத், டிசெ. 14

பாகிஸ்தான் சுப்பர் லீக் "ஸ்பொட் பிக்ஸிங்" வழக்கில் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காமைக்காக பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர் நஸீர் ஜம்ஷெட்டுக்கு ஒரு வருடத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

இவ்வாண்டு பெப்ரவரியில் இடம்பெற்ற பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் நடந்த ஸ்பொட் பிக்ஸிங் தொடர்பாக தண்டனைக்குள்ளாகும் ஐந்தாவது வீரர் நஸீர் ஜம்ஷெட்

சர்ஜீல் கான், காலிட் லத்தீவ், மொஹமட் இர்பான், மொஹமட் நவாஸ் ஆகியோருக்கு தண்டப் பணம் விதிக்கப்பட்டிருந்ததோடு, தடைகளையும் எதிர்நோக்கியிருந்தனர்.

# ஒய்வு எண்ணம் இல்லை



சிட்னி, டிசெ. 14

'ஓய்வுபெறும் எண்ணம் தற்போதில்லை' என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அலெஸ்ரெயர் குக்.

ஆஷஸ் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. இந்த ஆட்டம் அலெஸ்ரெயர் குக்கின் 150ஆவது ஆட்டமாகும். அலெஸ்ரெயர் குக்கிற்கு தற்போது 32 வயது. விரைவில் அவரது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'எதிர்காலம் குறித்து நான் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. எப்போது ஓய்வு பெறுவேன் என்பதும் எனக்குத் தெரியாது. தற்போது முழுக் கவனமும் இந்த டெஸ்ட் மீதுதான் (இன்று ஆரம்பமாகும் டெஸ்ட்) இருக்கிறது. எனது வாழ்க்கையில் மிகப் பெரிய ஆட்டம் இதுவாகும்.

என்னைப்பற்றி விமர்சித்தவர்களிடம் பேசுவதற்கு தற்போது நேரம் இல்லை. வலைப்பயிற்சியில் நான் இன்னும் கடினமாக உழைப்பது அவர்களுக்குத் தெரியாது. துடுப்பாட்டப் பயிற்சியாளருடனும் நிறைய நேரம் செலவிடுகிறேன். இன்னும் சாதிக்கும் உத்வேகத்தில் இருக்கிறேன். காயமின்றி தொடர்ந்து விளையாடிவருவது அதிர்ஷ்டமே' எனகுக் மேலும் தெரிவித்தார்.

# சிம்பாப்வே அணி அறிவிப்பு

zimbabwe cricket

ஹராரே, டிசெ. 14

தென்னாபிரிக்காவுக்கு எதிரான பகலிரவு டெஸ்ட் ஆட்டத்துக்கான சிம்பாப்வே அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் எதிர்வரும் 26ஆம் திகதி இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அணியில் வேகப்பந்து வீச்சாளர் பிளஸிங் முஸர்பனி, துடுப்பாட்ட வீரர் றயான் பேர்ள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் இருவரும் டெஸ்ட் அணியில் இடம் பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

அணி விவரம்: கிறேமி கிறீமர் (அணித்தலைவர்), ஹமில்டன் மசகட்ஸா, கிரேய்க் எர்வின், பிரெண்டன் ரெய்லர், சிபாபா, றெஜிஸ் சக்கப்பவா, ரசா, றயான் பேர்ள், சட்டாரா, முஸர்பனி, சிஸோரே, பீற்றர் மூர், சொலமன், ஜார்விஸ், மொபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 14.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.